மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 9.10 செப். அக் / Sep,Oct 2020

## அழிவின் நினைவுச்சின்னம்

செய்தி பக்கம்-18



"நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்" [கலா.5:15]

"சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" [மத்.5:9]




# “எளிமையின் சிகரம்”

**“ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவ னானால் என்னைப் பின்பற்றக்கடவன்”**

**(யோவா.12:26)**

நம்மைவிட்டு இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்த அன்புச்சகோதரர் பேட்ரிக் ஜாசுவா அவர்களைக் குறித்து எங்கள் “வேர்ட் ஆஃப் கிரைஸ்ட்” குடும்பத்தின் தலைவர், சகோதரர். இராஜேந்திரன் அவர்கள் என்னோடு பகிர்ந்து கொண்ட சில காரியங்களைச் சுருக்கமாக எழுதுவது அவசியம் என்று எனக்குத் தோன்றியது.

முதல் முறையாக 1984ஆம் ஆண்டு சகோதரர் பேட்ரிக் ஜாசுவா அவர்கள் பெரியகுளத்திற்கு ஊழியத்திற்கு வந்திருந்தபோது அவர்களைச் சந்தித்தேன். ஆண்டவருக்கென்று ஊழியஞ்செய்கிற ஒருவர் அவரைப் பின்பற்றுகிறவராக இருக்கவேண்டும் என்ற நியதியின் நிறைவேறுதலை அவரில் கண்டேன். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மீது பூரண அன்பு வைத்து ஊழியஞ் செய்தார். அந்த அன்பின் பிரதிபலிப்பை அவரில் காணமுடிந்தது. அவரோடு ஊழியஞ்செய்ய வருஷநாடு என்ற இடத்திற்குச் சென்ற நாள் இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அந்த இடத்தில் எதிர்ப்புகள் மத்தியிலும் மிகுந்த சாந்தத்தோடு நற்செய்தியைக் கூறிய தன்மை, அவர் சற்று ஓய்வெடுக்க எந்த அடிப்படை வசதியுமில்லாத ஒரு சிறிய எளிமையான வீட்டில் மகிழ்ச்சி யோடு தங்கியிருந்த பாங்கு என்னை மிகவும் கவர்ந்தது. அப்போதெல்லாம் நான் ஆடம்பரமாக வாழ்ந்த காலம். சகோதரர் பேட்ரிக் ஜாசுவா அவர்களின் எளிமையான வாழ்வு என்னை ஈர்த்தது. உண்மையாகவே அவர்களுடைய நடைமுறை வாழ்வு என்னையும் எளிமையானவானாக மாற்றியது. அவரை “எளிமையின் சிகரம்” என்று சொல்லலாம். உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்ய அவர் சொன்னபடியே இயேசு கிறிஸ்துவை பின்பற்றிய தேவமனிதர்.

- தொகுப்பாசிரியர் ●

---

# என்னைப் பரலோகத்தில் சந்தியுங்கள்



நான் விக்டோரியா ராணியின் வாழ்க்கைச் சரிதையை வாசித்திருக் கிறேன். அதில், சில நேரங்கள் ராணி லண்டன் புறநகர் பகுதியிலுள்ள குடிசைப் பகுதிக்குச் சென்று ஏதேனும் ஒரு வீட்டிற்குள் செல்வார்களாம். அந்த வீட்டாரை அன்போடு விசாரிப்பாராம். அவர்கள் கொடுக்கும் தேநீரை அன்போடு பெற்றுக் குடிப்பார்களாம். அப்படி ஒரு வீட்டிற்குச் சென்றபோது ராணி, புறப்பட எழுந்தபோது, “நான் உங்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர் களா?” என்று கேட்டாராம். அப்பொழுது அங்கிருந்த ஒரு வயதான மூதாட்டி “மாட்சிமை தங்கிய ராணி அவர்களே, நீங்கள் என்னைப் பரலோகத்திலும் சந்திக்க வேண்டும்” என்று கேட்டார்களாம். அதற்கு ராணி, “ஆம், நான் அங்கு கட்டாயமிருப்பேன். அது அப்படியே ஆகும். ஏனெனில் இயேசுகிறிஸ்து உங்களுக்காவும், எனக்காகவும் தமது இரத்தத்தை சிலுவையில் சிந்தியிருக்கிறாரே! ஆகவே அது அப்படியே ஆகும்” என்றாராம். **-நன்றி:** தகவல் - “தேவனோடு சமாதானம்” (Peace with God)- **பில்லி கிரஹாம்** ●



**மலர் - 18 செப், அக் - 2020 இதழ் - 9,10**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. கர்த்தருடைய நாள் | 6 |
| 3. உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் | 9 |
| 4. லூயிஸ் சாம்பெரினி | 11 |
| 5. நான் என் பரமவீட்டை நெருங்குகிறேன் | 17 |
| 6. அணுகுண்டு..அழிவின் நினைவு... | 18 |
| 7. கிறிஸ்தியானின் மோட்ச.....(பாகம்-12 ) | 22 |
| 8. இந்த நாட்டைக் கடவுள்தான்.... | 26 |
| 9. காரணமின்றிப் பகைக்கப்படுகிறீர்களோ? | 28 |
| 10. செய்திகள் .... | 9, 26 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

Website : www.wordofchrist.org

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
D.No.23-B, **“தை கிரேஸ்”**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

## “என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்று சொல்லி, ஏசா சத்தமிட்டு அழுதான்” (ஆதி.27:38)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஏசாவும் யாக்கோபும் ஈசாக்கின் இரட்டைப் பிள்ளைகள். ஏசா மூத்தவன். யாக்கோபு இளையவன். யூத முறைமையின்படி சேஷ்டபுத்திரனுக்கு (மூத்த மகனுக்கு) தகப்பனுடைய ஆஸ்தியில் இரட்டிப்பான பங்கு உண்டு. ஏசா அதற்கு உரிமையாளன். அதோடு மட்டுமின்றி தகப்பனுடைய மறைவுக்குப்பின் அவன் தான் குடும்பத்தினருக்கும் சந்ததியினருக்கும் தலைவன். அவன் வாழும் கால முழுவதும் குடும்பத் தலைமைத்துவத்தின் (Leadership) பொறுப்பு அவனுக்குத் தான். அதோடு மட்டுமின்றி அவன் அந்தக் குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவனும் ஆசாரியனுமானவன். ஈசாக்கு பலிபீடத்தைக் கட்டி ஆராதித்ததையும் (ஆதி.26:25). யாக்கோபு பலிபீடத்தைக் கட்டி ஆராதித்ததையும் (ஆதி.35:3-7)லிருந்து அறிகிறோம். மூத்தமகன் என்ற முறையில் இந்த மூன்று கவுரவமும் (Honour) அவனுக்குண்டு. இவ்வளவு பேறுபெற்ற ஏசா இப்பொழுது தகப்பனை நோக்கி “என்னையும் ஆசீர்வதியும்” என்று சத்தமிட்டு அழ வேண்டிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டது?

அவனது தவறான தெரிந்தெடுப்பு (Wrong Choice). ஒருநாள் ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது யாக்கோபு சமைத்துக் கொண்டிருந்த சிவப்புக்

கூழிலே நாட்டம் கொண்டான். அந்தச் சிவப்புக்கூழில் எனக்குக் கொஞ்சம் தா. நான் இளைத்திருக்கிறேன் என்று கேட்டான். யாக்கோபு இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி "உன் சேஷ்டபுத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு" என்றான் (ஆதி.25:31). அற்பமான ஒருவேளை உணவுக்காக மேன்மையான சேஷ்டபுத்திரபாகத்தை, "இந்தச் சேஷ்டபுத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு" என்று அலட்சியம் செய்து யாக்கோபுக்கு விற்றுப்போட்டான் (Despised and sold it out)(வ.32). பின் நாட்களில் அவன் ஆசீர்வாதத்தைத் சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும் அவனால் பெற்றுக்கொள்ளக் கூடாமற்போயிற்று. ஆகவே தான் அவன் தகப்பனிடத்தில் போய் என்னையும் ஆசீர்வதியும் என்று சத்தமிட்டு அழுதும் பயனில்லாமற் போயிற்று. **அவனது தவறான தெரிந்தெடுப்பும் சேஷ்டபுத்திரபாகத்தை "எனக்கு என்னத்துக்கு" என்று அலட்சியம் செய்ததும் ஏசாவை எவ்வளவு பரிதாபமான நிலவரத்திற்குக் கொண்டு சென்றுவிட்டதென்று பாருங்கள்.**

நம்மில் அநேகருடைய நிலவரம் இதுதான். அற்ப சந்தோஷத்திற்காக, குறுகிய காலப் பயனை கருத்தில் கொண்டு. இப்போது எனக்கு இது கிடைத்தால் போதும் என்ற மனப்பாங்கோடு தவறான தெரிந்தெடுப்புகளைச் செய்கிறோம். இதைத் தவிர்ப்பதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் தரும் ஆலோசனையைப் பாருங்கள். "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரி.10:31). நான் இதை இப்படிச் செய்தால் என் ஆண்டவர் பிரியப்படுவாரா அல்லது இதன் நிமித்தம் அவருடைய நாமம் மகிமைப்படுமா என்ற கேள்விகளை முன் நிறுத்தி சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும். ஆகவேதான் எபேசியர் நிருபத்தில் "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்" என்கிறார் (எபே.5:10) . கர்த்தருக்குப் பிரியமானது எது, பிரியமில்லாதது எது என்பதை அடையாளங் கண்டு கொள்வதில் சந்தேகம் ஏற்பட்டால் தாவீது தரும் ஆலோசனையைப் பாருங்கள். "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்" என்று ஜெபத்தில் மன்றாடுகிறான்(சங்.143:10). ஒரு காரியத்தில் ஒரு முடிவு எடுப்பதற்கு முன் இவற்றையெல்லாம் சிந்தித்துத் தாவீதைப் போல தேவசமுகத்தில் ஜெபத்தில் அமர்ந்திருக்க நாம் கற்றுக் கொள்ளுவோம்.

ஏசா தவறான தெரிந்தெடுப்பு செய்த மற்றுமொரு காரியத்தைப் பாருங்கள். ஏசா தன் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக அன்னிய தேவர்களை வழிபடும் கானானிலுள்ள ஏத்திய ஜாதியைச் சேர்ந்த யூதித் மற்றும் பஸ்மாத் என்ற இரண்டு பெண்களைத் திருமணம் செய்துகொண்டான். "அவர்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்" என்று வேதம் சொல்லுகிறது(ஆதி.26:35). அந்நியப்பெண்கள் அந்நியதேவர்களின் விக்கிரகங்களை வீட்டிற்குள் கொண்டு வந்திருக்கக் கூடும். தெய்வ வழிபாட்டிலும் அவர்கள்

செயல்பாட்டிலும் யெகோவா தேவனுக்கு மாறுபட்டு நடந்திருக்க வேண்டும். அது குடும்பத்தில் மனநோவைக் கொண்டு வந்துவிட்டது. அந்த நிலை வளர்ந்து "ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக் கிறது" (ஆதி.27:46). அதாவது அவர்களது நடக்கை ரெபெக்காளுக்கு தன் ஜீவனை வெறுத்து தற்கொலை செய்யும் எண்ணம் உருவாகும் அளவுக்கு செயல்பட்டுள்ளன. என்பதை சிந்தித்துப் பாருங்கள். தான் கெட்டதுமன்றி இப்பொழுது குடும்பத்திற்குள்ளும் கேடானவைகளை நுழைத்து விட்டான்.

இதுபோன்ற நிலவரங்கள் கிறிஸ்தவ குடும்பங்களுக்குள் பிரவேசித்து பெரிய சீரழிவை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. கோத்திரப் பிதாவாகிய யாக்கோபின் குடும்பத்தில் ஏற்பட்ட சீரழிவைப் பாருங்கள். ஏசாவின் பாவம் நமக்கு எச்சரிக்கையின் சின்னமாக நிற்கிறது. "அந்நிய நுகத்திலே அவிசுவாசி களுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசை வேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத் துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?" என்பதை சிந்தித்துச் செயல் படுவோம் (2 கொரி.6:14-16).

இயேசுவின் பணியில்

K.செல்வின் தங்கதுரை

## குட்டிக்குரங்கின் பரலோக ஆசை

குட்டிக்குரங்கு ஒன்று தாய்க்குரங்கிடம், "அம்மா, பரலோகத்திற்குச் செல்லும் வழியை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றதாம். "ஒரு முனிவர் இருக்கிறார். அவர்தான் பரலோகத்துக்கு வழிகாட்ட முடியும்" என்று அவர் இருக்கும் இடத்திற்கு வழியையும் சொன்னது தாய்க்குரங்கு. குட்டிக் குரங்கு முனிவரைத் தேடிச் சென்று கண்டு பிடித்துவிட்டது. அக்குட்டி குரங்கிடம் ஒரு வாழைப்பழத்தைக் கொடுத்து, "இந்த வாழைப்பழத்தை பத்திரமாக வைத்துக்கொள். இன்று மாலை என்னை வந்து பார். வரும்போது இந்த வாழைப்பழத்தையும் கொண்டு வா" என்று சொல்லி அனுப்பிவிட்டார். குட்டிக் குரங்கு முனிவரிடமிருந்து வெளியே சென்றது. வாழைப்பழத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தது. முனிவர் சொன்னது நினைவுக்கு வந்தது. அப்படியே கையில் வைத்துக்கொண்டது. இதை நக்கிப் பார்ப்பதினால் ஒன்றும் தவறு இல்லையே என்று எண்ணி அதை திரும்பத் திரும்ப நக்கியது. ஆனாலும் அதை உரித்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்துகொண்டே இருந்தது. முனிவர் வாழைப்பழத்தைத் திரும்ப கொண்டுவரச் சொல்லியிருக் கிறாரே. பெரிய மனப்போராட்டம். மனப்போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியா மல் தவித்தது. கடைசியாக வாழைப்பழத் தோலை மெதுவாக உரித்தது. பழத் தின் ஆசை நாவில் எச்சில் கொட்ட ஆரம்பித்தது. பரலோகத்திற்குப் போவதை விட இந்த வாழைப்பழத்தைச் சாப்பிடுவதே மேல் என்று தீர்மானித்தது. கடைசியாக பழத்தைச் சாப்பிட்டு முடித்தது. முனிவரிடம் திரும்பவில்லை. ●

# கர்த்தருடைய நாள்

**"இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும். ஆமென்" (வெளி.1 :7).**

இந்த வேத வசனம், கர்த்தருடைய நாளில் அவர் வரப்போகிற சம்பவத்தைக் குறிக்கிறது. **கர்த்தருடைய நாள்** என்றால் என்ன? என் பதைக் குறித்து நாம் தியானிக்கப் போகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே தமது "சீஷர்களை நோக்கி: மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆனாலும் அதைக் காண மாட்டீர்கள். இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள். மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி மறு திசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாட்களிலே தோன்றுவார்" என்று சொன்னார்(லூக்.17:22-24).

"மனுஷகுமாரனுடைய நாளில் ஒன்றை நீங்கள் காண ஆசைப்படுவீர்கள். ஆனால், நீங்கள் காண மாட்டீர்கள்" என்று வேதம் கூறுகிறது. இவைகளைக் காண வேண்டும் என்று அநேக தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும் ஆவலோடு காத்திருந்தார்கள். ஆனால், அவர்களால் அந்த நாட்களைக் காண முடியவில்லை (மத்.13:17). அவர்களெல்லோரும் தூரத்தில் அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, விசுவாசத்திலே மரித்தார்கள் என்று வேதம் கூறுகிறது(எபி.11:13). ஆனால், "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்" என்று இயேசு சொல்லுகிறார் (யோவா.8:56). கர்த்தருடைய நாளை ஆபிரகாம் கண்டாராம். ஆபிரகாம் தம்முடைய ஒரேபேறான குமாரனை, மோரியா தேசத்திலுள்ள மலையில் கர்த்தருக்கென்று பலி கொடுக்கச் சென்றபொழுது, தேவன் அவரை தடுத்தாட்கொண்டு, ஒரு ஆட்டுக்கடாவைக் காண்பித்தார் (ஆதி.22:13,14). அவன் அந்த ஆட்டுக் கடாவைப் பிடித்து, கர்த்தருக்கென்று பலியாகக் கொடுத்து, அந்த இடத்திற்கு "யேகோவாயீரே" (கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப் படும்) என்று பெயரிட்டான்.

எனக்குப் பிரியமானவர்களே, மேற் கண்ட காரியத்தை நாம் கூர்ந்து நோக்குவோமாகில், ஆபிரகாம் அந்த மலையில் ஆட்டுக்கடாவைக் கண்ட பொழுது, உலகத் தோற்றம் முதற் கொண்டு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரை அவர் கண்டிருக்க வேண்டும். வேதத்தில் இயேசு கிறிஸ்

துவைப் பற்றிச் சொல்லும்பொழுது, ஆட்டுக்குட்டியானவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று வாசிக்கிறோம். ஆம், அவர் ஆட்டுக் குட்டியானவராய் ஆபிரகா முக்குக் காட்சியளித்தார். அவர் அன்று கண்டது ஒரு சாதாரண காட்சியல்ல. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தது முதல் இரண்டாம் வருகை வரை அவர் பார்த்திருக்க வேண்டும். அவர் கொல்கொதா மலையில் இரத்தம் சிந்தி மரித்த தையும் கண்டிருக்க வேண்டும். அதற்குப் பின்பு, பூலோகத்திலுள்ள எல்லா கோத்திரத்தாரும் அவரை நம்புவதின் மூலம் இரட்சிக்கப்பட்டு அவர்கள் பிள்ளைகளாவதையும் கண்டிருக்க வேண்டும். அவர் ஒலிவ மலையில் தம்முடைய இரண்டாம் வருகையில் வந்து, நியாயத்தீர்ப்பு அளிக்க இருப்பதையும் அவரால் காணமுடிந்தது. ஆகவேதான், "கர்த்த ருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள் ளப்படும்" என்றார் (ஆதி.22:14).

பிரியமானவர்களே, "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப் பார்கள்; நாமும் மறுரூபமாக்கப் படுவோம்" என்று வேதம் கூறுகிறது (1 கொரி.15:52). எக்காளம் தொனிக்கும் பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப் பார்கள். பரிசுத்த பவுல் சொல்வதைப் போல, கிறிஸ்துவுக்குள் வாழுகிற நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

**மறுரூபம் என்றால் என்ன?**

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர் களுக்கு முன்பாக மறுரூபமானார். அவருடைய "முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மை யாயிற்று" என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (மத்.17:2). உயிரோ டிருக்கிற அவர் மறுரூபமாகி, பின்பு நடக்கப்போகும் காரியங்களுக்கு திருஷ்டாந்தமாய்த் தம்மை வெளிப் படுத்தினார். உயிரோடு இருக்கிற நாம் எப்படி மறுரூபமாவோம் என்று யோசிக்க வேண்டாம். இயேசு கிறிஸ்து மறுரூபமானதைப் போலவே நாமும் மறுரூபமாவோம். மரித்தோர்களும் உயிரோடே எழுந் திருப்பார்கள்.

எனக்குப் பிரியமானவர்களே, அநேகர் கர்த்தராகிய கிறிஸ்துவைக் காணவேண்டுமென்று வாஞ்சை யோடு இருந்தார்கள். தேவ பக்தி யுள்ளவனும் நீதிமானுமாயிருந்த சிமியோனுக்கு "கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது" (லூக்.2 :26). வேறுவிதமாகச் சொன்னால் "நீ இரட்சகரைக் காண்பாய்" என்று பரிசுத்த ஆவியானவர் அவனுக்குச் சொல்லியிருந்தபடியினால், தேவால யத்திற்குக் கொண்டு வரப்பட்ட இயேசு கிறிஸ்துவைக் கண்டான். "உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது" என்று சொல்லு கிறான் (வ.32). அநேகர் எதிர்பார்த் திருந்தார்கள். நமக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். நாம் இயேசு கிறிஸ்து வின் இரண்டாம் வருகையின்போது அவரோடு காணப்படப்போகிறோம்.

**கர்த்தருடைய நாள் என்றால் என்ன?**

அது மகா பயங்கரமான நாள். அந்த நாளில் எப்படிப்பட்ட சம்பவங்கள் சம்பவிக்கும்? அப்போஸ்தலனாகிய பேதுரு, **“கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப் போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்”** என்று அதன் பயங்கரத்தை விவரிக்கிறார் (2பேது.3:10). யோவேல், செப்பனியா, நாகூம், மல்கியா போன்ற தீர்க்கதரிசிகளும், “அது மகா பயங்கரமான நாள், அது சங்காரம்போல வரும்; அது இரவிலே திருடனைப்போல வரும்” என்று கர்த்தருடைய மகா நாளைக் குறித்து தங்களுடைய புத்தகத்திலே எழுதியிருக்கிறார்கள். ஆம், அவருக்கு விரோதமாய் இருக்கிறவர்களுக்கு அந்த நாள் சங்காரம்போல இருக்கும். அவரை எதிர்பாராதவர்களுக்கு அது புலம்புகிற நாளாக இருக்கும். அந்த நாள் வரும் முன்னே சூரியனும் சந்திரனும் ஒளி கொடாமல் இருக்கும். அப்படிப்பட்ட பயங்கரமான நாளாய் அந்த நாள் இருக்கும். ஆனால், நாம் ஒளியின் பிள்ளைகளாய் இருக்கும்பொழுது, அந்த நாளுக்குப் பயப்படவேண்டாம். அந்த நாளில் நமக்குப் பெரிய ஆசீர்வாதம் காத்திருக்கிறது (1தெச.5:4,5) கர்த்தருடைய நாள் உங்களுக்கும் எனக்கும் மகிழ்ச்சியான நாளாயிருக்கும். மட்டுமல்ல, கர்த்தருடைய நாள் தேவ கோபாக்கினையின் நாள் என்று வேதம் கூறுகிறது. தேவாதி தேவனாக இருந்து பூமியில் அவருடைய குமாரனாக இறங்கி வந்த இயேசு கிறிஸ்துவின் கோபாக்கினையின் நாள். “சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக் குட்டியானவரின் கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளும். அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது; யார் நிலைநிற்கக் கூடும்” என்று வெளிப்படுத்தின விசேஷம் 6:16, 17இல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆம், குமாரன் கோபங் கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள். கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் என்று வேதம் கூறுகிறது (சங்.2:12) இங்கே குமாரனுடைய கோபத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் கிருபை நிறைந்தவர்; இரக்கம் நிறைந்தவர். அன்பான ஆண்டவர்தான். ஆனால், கடைசிநாட்களில் நியாயாதிபதியாய் அவர் இறங்கி வருவார். அவர் கோபத்தின் மகா நாள் தான் கர்த்தருடைய நாள். ஆனால், தம்மை நேசித்து, தம்மைப் பின்பற்றின தம்முடைய பிள்ளைகளுக்கு அவர் தம்முடைய ராஜ்ஜியத்தை வழங்க வருவார். உண்மையில் அந்த நாள் நமக்கு ஆசீர்வாதமான, மகிழ்ச்சியான நாளாய் இருக்கும். ●

– **நன்றி: டாக்டர்.பால் N, Mo:** 9884739635
www.gloryofjesus.org, Chennai.



# ஒழுக்கக் கேட்டிற்கு வழிவகுக்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள்

நற்பண்புக்கும், கலாச்சாரத்திற்கும், மனித நேயத்திற்கும், சமாதானத்திற்கும் பேர்பெற்றதுதான் நமது இந்தியப் புண்ணிய பூமி. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியா ஓர் ஆன்மீக பூமி, என பிறநாட்டாரின் பாராட்டுதலையும் பெற்ற நாடு. இது புத்தன் பிறந்த பூமி. மகாத்மா காந்தி பிறந்த பூமி என பெருமைபாராட்டிக் கொள்ளுகிறோம். அப்படிப்பட்ட சிறப்புகளைப் பெற்ற இந்தியா இன்று அருவருக்கத் தக்க பெரும் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அதற்குச் சமீபத்தில் நமது நாட்டின் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் அந்த சரிவுக்குச் சான்றாக நிற்கிறது.

விபசாரம் (Adultery) பாவம் (Sin), மரணதண்டனைக்கான பாவம். புனித வேதாகமம் "ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால் பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படகடவர்கள்" என்று சொல்லுகிறது (லேவியராகமம் 20:10). விபசாரம் தண்டனைக்குரிய குற்றம் (Crimes) இந்திய தண்டனைச்சட்டம் (Indian penal code) பிரிவு 497 சொல்லுகிறது. திருமணமான ஒருவர் தன்னுடைய மனைவி அல்லாத மற்றொருத்தியோடு அவளது சம்மதம் இல்லாமல் பாலியல் உறவு கொண்டால் அது கற்பழிப்புக்கு இணையான குற்றமும் (பிரிவு 376 இ.த.ச) விபசார குற்றமுமாகும். விபசார குற்றம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கான குற்றம். இது நமது நாட்டின் சட்டத்தின் நிலை. இந்தியத் தண்டனைச் சட்டத்தை உருவாக்கிய லார்ட் மெக்காலே (Lord Macaulay), சட்டத்தையும், தண்டனையையும் (Law and punishment)புனித வேதாகமத்திலிருந்து எடுத்ததுதான், சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப வடிவமைத்துள்ளார்.

2018ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்ற, தலைமை நீதிபதி தீபக் மிஸ்றா தலைமையிலான அரசியல் சாசன அமர்வில் (Constitution Bench) ஒருவன் பிறனுடைய மனைவியின் சம்மதத்தோடு (with consent) பாலியல் உறவு கொண்டால் அது குற்றம் அல்ல. ஏனெனில் தண்டனையைக் காட்டி பயமுறுத்தி திருமணமான கணவனையும், மனைவியையும் ஒருவருக்கொருவர் உண்மையாயிருங்கள் என கட்டாயப்படுத்த முடியாது. (See 497 IPC cannot command married couples to remain loyal to each other for the fear of penal punishment) என்ற தீர்ப்பளித்து பிரிவு 497 இ.த.ச சட்டப்படி குற்றமல்ல என்று அந்த சட்டப் பிரிவு நீக்கப்பட்டது. இந்த தீர்ப்பு மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என மறுஆய்வு மனு (Review Petition) அதே உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி விபசாரம் குற்றம்

என்றிருந்ததைக் குற்றம் அல்ல என்று தீர்ப்பளித்தது இந்தியக் கலாச்சாரத்திற்கும் பண்புக்கும் மாறானது. இந்த நீக்கப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வருமானால் குடும்பம் என்ற அமைப்பு சிதைந்து போய்விடும். விபசாரக் குற்றமும் விவாகரத்து வழக்குகளும் பெருகுவதற்கு வழியைத் திறந்துவிட்டது போலாகும். இதில் அவரவர்கள் சம்மதத்தையும் உரிமையையும் பொறுத்தது என்று முடிவு செய்வது முறையல்ல. குடும்பங்கள் கட்டிக்காக்கப்பட வேண்டும். எப்படியும் வாழலாம் என்ற நிலையை அனுமதிக்கக் கூடாது என்ற காரணங்கள் மறு ஆய்வு மனுவில் முன்வைக்கப்பட்டது.

மறுஆய்வு ஜுன்மாதம் 2020இல் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி போப்டே அவர்கள் விசாரணைக்கு வந்தது. விபசார குற்றம் பெருகியிருக்கிறது என்றோ விவாகரத்து வழக்குகள் கூடியிருக்கிறது என்றோ காட்ட எந்த ஆதாரமும் இல்லை என்றும் குடும்ப கட்டமைப்புக் குலைந்துவிட்டது என்றும் சொல்வதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ஆகவே 2018இல் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தலையிட்டு மாற்றம் செய்ய இயலாது என்று தீர்ப்பளித்து மறு ஆய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கு முன்பாக இதே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் திருமணமாகாத ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருவரும் சம்மதித்தால் திருமணம் ஆகாமலேயே ஒன்றாக வாழலாம் (Live-in-Relationship) என்று தீர்ப்பளித்தது. திருமணம் இல்லாமலேயே ஆணும் பெண்ணும் ஒன்றாக வாழும் ஒழுக்கமற்ற புதிய கலாச்சாரத்திற்கு நீதிமன்றம் வழிதிறந்துவிட்டிருக்கிறது. **தெய்வீகச் சட்டம்** (Divine law) விபசாரத்தில் ஈடுபட்ட இருவரும் கொல்லப் படவேண்டிய பாவம் என்று சொல்லுகிறது. **தேசத்தின் சட்டம்** (Law of the Land) விபசாரம், குற்றம் அல்ல என்று சொல்லுகிறது. எந்தச் சட்டத்திற்கு நாம் மதிப்பளிக்கப் போகிறோம்?

அன்பானவர்களே, சிந்தியுங்கள். தேசத்தின் சட்டம் நாம் இந்த உலகில் வாழும் காலம் வரைதான் செல்லும். தெய்வீகச் சட்டம் இந்த உலகிற்கும் வரவிருக்கும் மறுஉலகத்திற்கும் செல்லும். மறு உலக வாழ்வு நித்தியமானது என்பதை சிந்தையில் கொள்ளுங்கள். ஆண்டவர் இவ்வாறு சொல்லுகிறார். ‘‘நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன்’’. நீ பிழைக்கும்படி ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் தெரிந்துகொள் என்கிறார்(உபா.30:19). தெரிந்து கொள்ளும் உரிமையை நமக்குத் தந்திருக் கிறார். எதைத் தெரிந்து கொள்ளப் போகிறோம்? நம்முடைய தீர்மானமே நம்முடைய இலக்கை நிர்ணயிக்கும் (Our decision will decide our destiny). ●

தகவல்: The Hindu 25.6.2020

**நாம் வாழ்ந்த காலங்கள் கல்லறையில் எழுதப்படும் நாம் வாழ்ந்த விதங்கள் கர்த்தரின் புத்தகத்தில் எழுதப்படும்.**

- நன்றி சகோதரர் சாம்சன்பால், ‘‘ஜீவ நீரோடை’’



## உள்ளம் உடைந்து போகாத இரண்டாம் உலக யுத்த வீரர் லூயிஸ் சாம்பெரினி (Louis Zamperini - 1917 - 2014)

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்க இராணுவத்தில் விமானப்படையிலிருந்த லூயிஸ் சாம்பெரினி தான் சென்ற விமானம் இயந்திரக் கோளாறினால் பசிபிக் கடலில் விழுந்த நிகழ்வில் அவர் எப்படி 47 நாட்களுக்குப் பின் ஆச்சரியமாக உயிர்தப்பினார், எப்படி ஜப்பானியர்களிடம் சிக்கி யுத்தக் கைதியாகச் (Prisoner of war) சித்திரவதைகளைச் சந்தித்தார் என்பது வியப்பும் அதிர்ச்சியும் கலந்த அனுபவமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எப்படி இயேசுவைச் சந்தித்தார் என்பது வியப்பிற்குரியது. அதிலும் முத்தாய்ப்பானது என்னவெனில் எந்தச் சூழ்நிலையிலும் அவர் உள்ளம் உடைந்து போகவில்லை.

லூயிஸ் சாம்பெரினி நியூயார்க்கிலுள்ள ஒலியான் நகரில் ஜனவரி 1917இல் ஏழ்மையான பெற்றோருக்குப் பிறந்து வளர்ந்தார். படிப்பில் நாட்டமற்றவராய் தகாத நண்பர்களின் உறவோடு பள்ளி நாட்களை கழித்தாலும் ஓட்டப்பந்தயத்தில் அதிலும் குறிப்பாக தொலைதூர ஓட்டப்பந்தயத்தில் (Long distance race) மிகுந்த நாட்டமுள்ளவராயிருந்தார். அதில் வெற்றியும் பெற்றார். 1934இல் தேசிய அளவில் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான நிகழ்வில் முதலிடம் பெற்றார். தென் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தினர் சிறப்பு ஸ்காலர்ஷிப் கொடுத்துப் பல்கலைக் கழகத்தில் சேர்த்துக் கொண்டனர். தடகள நிகழ்ச்சியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தபடியால் 1936இல் பெர்லினில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 5000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அதில் அவருக்கு வெற்றி கிட்டாவிட்டாலும் ஊக்கம் குன்றாதவராக தன்னை அடுத்த ஒலிம்பிக்கிற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ள தீர்மானமாயிருந்தார். அந்தச் சமயம் ஜெர்மன் அதிபர் அடாலப் ஹிட்லருடன் தன்னுடைய சக தடகளப் போட்டியாளர்களோடு போட்டா எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததை மிகவும் பெருமையாய் பேசிக் கொள்வார்.

இரண்டாவது உலகயுத்தம் தொடங்கியபடியால் 1940இல் நடக்கயிருந்த ஒலிம்பிக் போட்டி இரத்து செய்யப்பட்டது. லூயிஸ் சாம்பெரினி அமெரிக்க இராணுவத்தில் விமானப் படையில் சேரும் சூழ்நிலை ஏற்பட்டது. B-24 லிபரேட்டர் என்ற குண்டுவீசும் போர்விமானத்தில் (Bombardier) 11 பணியாளர்களுள் அவரும் ஒரு பணியாளராக (crew) இருந்தார். 1943ஆம் ஆண்டு பசிபிக் கடலில் ஒரு போர்விமானம் விபத்துக்

குள்ளாகி மூழ்கிவிட்டபடியால் அதில் உயிரோடிருப்போரை மீட்கும் பணியில் B.24 லிபரேட்டர் என்ற விமானம் அனுப்பப்பட்டது. ஆனால் துரதிஷ்டமாக மீட்புப் பணியாகச் சென்ற போர் விமானமும் இயந்திரக் கோளாரால் அதே பசிபிக் கடலில் விழுந்தது. அதில் பயணித்த 11 பேரில் லூயிஸ் சாம்பெரினி உட்பட மூன்று பேர் மட்டுமே ஆச்சரியமாக அப்போது உயிர்தப்பினர்.

மரத்துண்டுகளை இணைத்துக் கட்டப்பட்டத் தட்டையான மிதவை (Raft) அவர்களுக்குக் கிடைத்த படியால் கடலில் அலைகளோடு போராடி அதை உறுதியாகப் பற்றிக் கொண்டனர். ஒருநாள் இரண்டு நாள்கள் அல்ல 47 நாள்கள் குடிக்கத் தண்ணீரும் உணவுமின்றி அலைகளோடு போராடும் பெலனையும் இழந்து மரணம் எப்பொழுது வருமோ என்ற நிலவரத்தை எட்டும் சூழ்நிலை வந்தது. மழை பெய்கிற வேளையில் வாயைத் திறந்து மழை நீரைப் பருகுவார்கள். சில வேளைகளில் சில கடல் பறவைகள் அவர்களது கட்டுமர மிதவையில் தங்கும். அதைப் பிடித்து அதன் இரத்தத்தைக் குடித்திருக்கிறார்கள். கூரிய பற்களுள்ள சுறா மீன்கள் (Shark) நெருங்கி வரும் சூழ்நிலைகளைச் சந்தித்தனர். அவரோடு மிதவையிலிருந்த பணியாள் பிலிப், விமான மோட்டி ரசல் ஆலன் இருவரும் மிதவையை வழுவவிட்டு கடலில் விழுந்து அலைகளால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இப்பொழுது லூயிஸ் சாம்பெரினியை தனிமை அச்சுறுத்தியது. அப்போதுதான் அவர் ஆண்டவரை நோக்கிக் கதற ஆரம்பித்தார். “ஆண்டவரே, என் மீது இரக்கமாயிரும், என்னைக் காப்பாற்றும். என்னை ஜீவனோடு வைத்தால் என்னுடைய எஞ்சிய காலத்தில் உமக்காகவே வாழ்வேன்” என்றெல்லாம் ஜெபிக்க ஆரம்பித்தார். அவர்கள் சென்ற விமானம் விபத்துக்குள்ளானது. ஜப்பானியரின் எல்லைக்கு உட்பட்டதாக இருந்தது. அவரோடிருந்த பிலிப், ஏசல் ஆகியோரின் சடலம் சுமார் 1000 கி.மீ-க்கு அப்பாலுள்ள ஜப்பானிய கடலோரத்தில் ஒதுங்கியதை ஜப்பானியர் கண்டுபிடித்து ஒருவேளை உயிரோடிருப்பவர்கள் இருக்கக்கூடும் என பசிபிக் கடலில் தேட ஆரம்பித்துள்ளனர். அதன் காரணமாக லூயிஸ் சாம்பெரினி மீட்கப்பட்டார். ஆனால் எதிராளியாகிய ஜப்பானியர்களின் கையில் சிக்கிக் கொண்டதை உணர்ந்தார்.

இப்பொழுது கடலுக்குத் தப்பிக் கொடிய எதிராளிகளிடம் சிக்கிக் கொண்டார். லூயிஸ் சாம்பெரினி யுத்தக் கைதியாக (Prisoner of war) சிறையில் அடைக்கப்பட்டார். ஜப்பானிய எல்லைக்குள் வந்து உளவு பார்க்க வந்தவன் என்று அவரை மிகக் கடினமாக நடத்தி விசாரிக்க ஆரம்பித்தனர். அவரைப் பட்டினி போட்டு விசாரித்தனர். சரீரத்தைக் கொடிய சித்திரவதைக்குள்ளாக்கினார்கள். ஆனாலும் விமான விபத்தில் சிக்கியவன் என்பதைத் தவிர

அவரால் வேறு எதையும் சொல்ல முடியவில்லை. சிறை அதிகாரி சார் ஜென்ட் "பேர்ட்" (Bird) அவரை மிகக் கொடூரமாக நடத்தினார். "பேர்ட்" என்பது அவருடைய செல்லப் பெய ராம் (Nick name). "பேர்ட்" வருகிறார் என்றால் சிறைவாசிகள் நடுங்க ஆரம்பித்து விடுவார்களாம். இந்தச் சூழ்நிலையில் இரண்டு ஆண்டுகள் சிறையிலேயே இருந்தார். விடுதலை யின் நாள் வருமா என்ற ஏக்கம் ஒருபுறம். அவர் சிறையிலிருப்பதை அமெரிக்காவுக்குத் தெரிவிக்க ஏதேனும் வாய்ப்பு கிடைக்காதா என்ற தவிப்பு ஒருபுறம். கடலில், வாழ்வா, சாவா என்று கொடிய அலைகளோடு 47நாள்கள் போராட்டம். சிறையிலும் அதே போராட்டம். ஆண்டுகள் தாண்டுகின்றன. ஆண்டவரும் அவரைக் கைவிட்டுவிட்டாரோ என்ற எண்ணமே அவரில் மேலோங்கியது.

இந்த இடைக்காலத்தில் அமெரிக்க அரசு லூயிஸ் சாம்பெரினி இறந்து விட்டதாகவே கருதி முடிவான ஆணை பிறப்பித்தது. அவரது குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகையும் கொடுத்தது.

1945ஆம் ஆண்டு இரண்டாம் உலகயுத்தம் முடிவடைந்தது. அப்பொழுது ஜப்பான் தனது நாட்டில் அமெரிக்காவைச் சார்ந்த, யுத்த கைதியாக சிறையிலிருக்கும் லூயிஸ் சாம்பெரினியின் பெயரை அறி வித்தது. அமெரிக்க அரசு ஒரு தனி விமானத்தை அனுப்பி அவரைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. அமெரிக்காவில் கலிபோர்னியா விமானம் தரை இறங்கியபோது ஒரு பெரிய அணிவகுப்பு மரியாதையும் யுத்தக் கால வீரன் (War Time Hero) என்ற வகையில் பெரும் வரவேற்பும் அளிக்கப்பட்டது. அரசு அவருக்கு இழப்பீடாகப் பெருந்தொகையைக் கொடுத்தது. அரசு அவரை கவுர விக்கும் வகையில் கலிபோர்னியா விமான நிலையத்திற்கு லூயிஸ் சாம் பெரினியின் பெயர் சூட்டப்பட்டது.

விடுதலையாகி சொந்த நாட்டிற்குத் திரும்பிய மகிழ்ச்சி மிகக் குறுகிய காலமாகவே அமைந்தது. விடுதலை ஒரு மாயை போலவே தோன்றி யது. இப்பொழுது கடலில் அவர் சந்தித்த கொடிய அனுபவங்கள் ஜப்பானிய சிறையில் அனுபவித்த சித்திரவதைகள் அவரது சிந்தையை ஆட்கொண்டு இரவில் திகில் அடை யத்தக்கதான கோரக்காட்சிகள் (Night mare) அவரை அச்சுறுத்த ஆரம்பித்தன. அவரால் சிறிது நேரங் கூட நிம்மதியாகத் தூங்கமுடியாது. தன்னை சித்திரவதை செய்த "பேர்ட்" மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் மீதும் பகைமையும் பழிவாங்கும் உணர்வும் அவரை ஆட்டிப் படைத்தது. இப்பொழுது அதை மேற் கொள்ள குடிக்க ஆரம்பித்தார். காலப் போக்கில் முழுநேரக் குடிகாரனாக மாறினார் (Addicted to alcoholism) குடும்ப வாழ்க்கை சிதைந்தது. அவரது மனைவி சிந்தியா (Cynthia) அவரை விவாகரத்து செய்து

விடலாமா என்ற நிலைக்குத் தள்ளப் பட்டார். எனினும் பொறுமையோ டிருந்தார்.

சிந்தியா, நல்ல பக்தியுள்ள மனைவி, 1949இல் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் 6 வாரங்கள் தொடர்ந்து பில்லி கிரகாம் அவர்கள் பெரும் கூடு கையை நடத்தினார். சிந்தியா தனது கணவனை எப்படியேனும் அக்கூடு கைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று விரும்பி அவரைக் கெஞ்சியும் அவர் அசட்டை செய்துவிட்டார். மறு நாள் அவருடைய நண்பர் ஒருவர் அவரை எப்படியோ பேசி சம்மதிக்க வைத்து பில்லிகிரகாமின் கூடுகைக்கு அழைத்து வந்தார். பில்லிகிரகாம் **“எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்”** என்று பிரசங்கிக்க ஆரம்பித்தார் (ரோம.3:23). லூயிஸ் சாம்பெரி னிக்கு அந்த கருத்து பிடிக்கவில்லை. கடுங்கோபத்தில் நண்பரிடமும் சொல்லாமல் கூட்டத்தைவிட்டு எழும்பி வீட்டிற்குப் போய்விட்டார். வீட்டிற்குச் சென்றாலும் அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவர் ஒரு பாவி என்பதை பரிசுத்த ஆவியானவர் அவரை உணர்த்து வதை உணர்ந்தார். **இந்த உல கத்தில் அவர் உலக அளவில் தட களப் போட்டியில் செய்த சாதனை களோ, விமானப்படை வீரனாக அவர் சந்தித்தப் பாடுகளோ அதைத் தொடர்ந்த பாராட்டுகளோ தனக்குக் கிடைத்த பெருந்தொகை யான இழப்பீடோ அவரது பாவத்தைப் போக்கவோ சமாதா னத்தைப் பெற்றுக் கொள்ளவோ பயன்படாது என்பதை உணர ஆரம்பித்தார்.**

ஆனாலும் நாள்கள் கடந்தோடின. ஒருநாள் அவருடைய மனைவி பில்லிகிரகாம் நடத்தும் கூடுகைக்கு வரும்படி மிகவும் பணிவோடும், கனிவோடும் அழைத்தார். இந்த முறை அவர் கூடுகைக்கு வர ஒப்புக் கொண்டார். கணவனும் மனைவியும் பில்லிகிரகாம் நடத்திய கூடுகைக்குச் சென்றனர். அன்று பில்லிகிரகாம் அவர்கள் ஆண்டவருடைய வேதத்தைக் (Law) குறித்தும் வசனத்தைக் குறித்தும் (Word) அவற்றை முதன்மைப்படுத்தியும் பேசினார். “வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன். என் மறைவிடமும் என் கேடகமும் நீரே; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்” என்ற (சங்.119:113,114) வசனங்களை மையப்படுத்தியதாக அவரது பிரசங்கம் இருந்தது. இந்த வசனத் தின் ஆங்கில மொழியாக்கம் சற்று வித்தியாசமான கருத்தில் இருக்கும் (I hate the double-minded, But I love Your law. You are my hiding place and my shield, I hope in Your word (NKJV)) அதாவது **“இருமனமுள்ள வனை நான் வெறுக்கிறேன். உமது வேதத்தில் பிரியப்படு கிறேன். நீரே என் மறைவிடமும் கேடகமுமாயிருக்கிறீர். உம் முடைய வசனத்தை நம்புகிறேன்”**

என்பது தான் சரியான மொழிபெயர்ப்பாக இருக்க வேண்டும். ஆனால் வேதத்தில் பிரியமாயிருக்க வேண்டிய அவசியத்தையும், நம்முடைய நம்பிக்கையை ஆண்டவரில் ஊன்றிவிடும்போது நம்முடைய வீணான சிந்தனைகளிலிருந்தும், இருமனதான சிந்தனைகளிலிருந்தும் விடுதலை பெறுகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் வார்த்தை இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது வார்த்தை நம்மில் செயல்பட ஆரம்பிக்கிறது. ஆகவேதான் **“குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்”** என்று (யோவா. 8:36)இல் வேதம் சொல்லுகிறது. இக்கருத்துகளே அவருடைய பிரசங்கத்தின் மையமாக இருந்தது. நாம் முன்பு கண்டதுபோல லூயிஸ் சாம் பெரினியின் சிந்தை ஒவ்வொரு நாள் இரவும் திகிலடைந்த கோரக் காட்சிகளால் நிறைந்திருந்தது (Nightmare). அதை மேற்கொள்ள முழு நேரக் குடிகாரனாக இருந்தார். இச்செயல்கள் அவருடைய இருதயத்தை உறுத்த ஆரம்பித்தது. வீண் சிந்தனைகளுக்கு இடங்கொடாமல் ஆண்டவராகிய இயேசுவைத் தனது மறைவிடமாகக் கொள்ளும்போது, அவருடைய வார்த்தையில் நம்பிக்கையை ஊன்றும்போது (ஏசா.54: 14)ன்படி **“திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை”** என்ற நிச்சயம் அவருக்கு உண்டானது. கூட்டத்தின் இறுதியில் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் மேடைக்கு முன்பு வரும்படி மேடை அழைப்பு (Altar Call) கொடுக்கப்பட்டது. லூயிஸ் சாம்பெரினி அழைப்புக்குக் கீழ்ப்படிந்து மேடை அருகில் சென்றார். பாவ அறிக்கை செய்ய விரும்புகிறவர்கள் அருகில் அமைக்கப்பட்டிருக்கும் ஜெபஅறைக்குள் சென்று தனிமையில் ஜெபிக்கலாம் என்று சொல்லப்பட்டபோது அந்த அறைக்குச் சென்றார். திரும்பிய பின் பில்லிகிரகாம் அவர்களுடைய அனுமதியோடு தனது சாட்சியைச் சுருக்கமாகப்பகிர்ந்து கொண்டார். “என்னுடைய வாழ்க்கையில் சில நிமிட நேரங்களுக்குள்ளாக நிச்சயமான ஒரு மாற்றத்தைப் பெற்றுக் கொண்டேன். என்னுடைய பாவங்கள் என்னைவிட்டு அகன்றுபோயின” என்றார். எத்தனையோ ஆண்டுகளாயிருந்த திகிலிலிருந்தும், குடிப்பழக்கத்திலிருந்தும் விடுதலை பெற்றார். மற்றவர்களை மன்னிக்கும் அவசியத்தை உணர்ந்தார். ஜப்பானில் தன்னைக் கொடிய சித்திரவதைக்கு உள்ளாக்கிய சிறை அதிகாரி சார்ஜென்ட் பேர்ட் (Bird) என்பவர் மீது இருந்த பழிவாங்கும் உணர்வை மன்னித்து அவருக்கு கடிதம் எழுதினார். 1950ஆம் ஆண்டு ஜப்பானுக்குச் சென்று தன்னை கொடுமைக் குள்ளாக்கிய சிறை அதிகாரிகளையெல்லாம் சந்தித்து மன்னிப்பு கோரினார். ஆனால்

''சார்ஜென்ட் போர்ட்'' தன்னை சந்திப்பதை அனுமதிக்கவில்லை.

கலிபோர்னியாவில் ஹாலிவுட்டிலிருந்த முதலாம் பிரிசிப்பிட்டேரியன் சபையில் (First Presbyterian church) அங்கத்தினராக லூயிஸ் சாம்பெரினியும் அவருடைய மனைவியும் சேர்ந்தார்கள். அது மட்டுமல்லாமல் லூயிஸ் சாம்பெரினி இளைஞர் மத்தியில் ஒரு வல்லமையான ஊழியக்காரனாக மாறினார். அநேக இளைஞர்களை இயேசுவினண்டை வழிநடத்தும் நற்கருவியாகச் செயல்பட்டார். தனது முதிர் வயது வரை ஊழியஞ்செய்தார். நல்ல முதிர்வயதில் 2014ஆம் ஆண்டு ஜுலை 2ஆம் நாள் தன்னுடைய 97ஆம் வயதில் மரணமடைந்தார்.

பில்லி கிரகாம் லூயிஸ் சாம்பெரினியைப் பற்றி முதிர்வயதிலும் கனி தந்து புஷ்டியும் பசுமையுமாயிருந்தவர், **''இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக''** (சங்.71:18) . இந்த வசனத்திற்கேற்ப இந்த சந்ததிக்கும் வரவிருக்கும் சந்ததிக்கும் சாட்சியாக தனது முதிர்வயதுவரை ஆண்டவருக்கு ஊழியஞ்செய்தவர் என்று பாராட்டினார்.

இரண்டாம் உலகயுத்தக் காலத்தின் மாவீரன் என்ற வகையில் "Unbroken" என்ற அவருடைய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகமும் (Biography) "Devil at my feet" என்று அவர் எழுதிய புத்தகமும் மிகவும் பிரசித்திப் பெற்றவை. 2014ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற நடிகை ஏஞ்ஜெலினா ஜோலி (Angelina Jolie) லூயிஸ் சாம்பெரினியின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக தயாரித்தார். கொடிய பாடுகளையும், சிறைக்கூடச் சித்திரவதைகளையும் அனுபவித்த ஒரு மனிதர் ஆண்டவரை விட்டுத் தூரம் போனாலும் அவரைத் தமக்கென்று தெரிந்தெடுத்து அநேக இளைஞர்களை இயேசு கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் கருவியாக மாற்றியிருக்கிறாரே! ஆண்டவருடைய தெரிந்தெடுப்பு எவ்வளவு ஆச்சரியமானது! ''அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது'' (சங்.118:23). ●

**தகவல்:** Testimony of Louis Zamperini - **"Nearing Home"**- பில்லிகிரகாம் / இணையதளம்

**17ஆம் பக்கத் தொடர்ச்சி...**

அந்த இலக்கை நோக்கி நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோமா? அப்படி நெருங்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வோமானால் ''அவர் (இயேசு கிறிஸ்து) வெளிப்படும்போது அவர் இருக்கும் வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1 யோவா.3:2) இந்த நிச்சயம்தான் ஆவிக்குரிய முதிர்ச்சி. ●

# ‘‘நான் என் பரமவீட்டை நெருங்குகிறேன்’’
## (Nearing Home-Billy Graham)

**‘‘உன் தேவனாகிய கர்த்தர்... உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும் படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்திரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக’’ (உபா.8:2).**

உலகப் பிரசித்திப் பெற்ற நற்செய்தியாளர் பில்லிகிரஹாம் பெப்ரவரி 2018இல் தனது 99ஆவது வயதில் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். தனது முதிர் வயதின் 93ஆவது வயதில் “Nearing Home” (நான் என் பரம வீட்டை நெருங்குகிறேன்) என்ற அருமையான ஒரு புத்தகத்தைத் தயாரித்து இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்குத் தந்திருக்கிறார் என்றால் முதிர் வயதிலும் கனிகொடுத்திருக்கும் தேவமனிதர் என்பதற்கு அதுவே மிகப் பெரிய அடையாளம்.

தன்னுடைய மனைவியைக் குறித்து ‘‘எனது மிகச்சிறந்த சிநேகிதியும் (Best friend) அன்பு மனைவியுமான ரூத்தும் நானும் 64ஆண்டுகள் ஒன்றாய் வாழ்ந்தோம். 2017இல் அவள் தனது பரம வீட்டிற்குச் சென்று விட்டாள். எனினும் எனக்கு அது மிகப்பெரிய இழப்பு. என் சரீரத்தையே இரண்டாகப் பிளந்து விட்டது போல் இப்போதும் உணருகிறேன்’’ என்று குறிப்பிட்டுள்ளார். கணவன் மனைவி அன்பின் நெருக்கமான ஐக்கியம் முதிர் வயதிலும் கனி கொடுக்கும் மற்றுமொரு அனுபவம். குடும்ப வாழ்க்கையில் ஒரு நற்சான்று.

‘‘நான் என் 93வது பிறந்த நாளை விரைவில் கொண்டாட இருக்கிறேன். ஆண்டவர் என்னை பரலோக வீட்டிற்கு அழைக்கும் அந்த நாளை நான் எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். முதிர்வயதின் சரீர பெலவீனங்களின் தாக்கத்தின் உணர்வுகள் கடினமாகவே தோன்றுகிறது. முதிர்வயது ஒரு கடினமான பாதைதான். எனினும் ஆச்சரியம் என்னவெனில் ஆண்டவர் எனக்கு நல்லவராகவே இருக்கிறார். பரலோகத்தில் எனக்கு ஒரு பிரதிபலனை நியமித்து வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையின் நிச்சயம் என் சரீர பெலவீனங்களை மறக்கச் செய்கிறது. அங்கே துக்கமில்லை, வேதனை இல்லை. அந்த நம்பிக்கை என்னை பெலப்படுத்துகிறது’’ முதிர்வயதில் அவரது அசையாத விசுவாசத்தைப் பாருங்கள்.

முதிர்வயதில் வாழும் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் முதிர்வயதின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுகிறார். ‘‘நாம் வயதில் முதிர்ந்திருக்கிறது போலவே நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும் முதிர்ச்சியடைய வேண்டியது அவசியம். அதுதான் தேவனுக்கு நம்மைக் குறித்த திட்டம். அதற்காகவே நம்மை முன்குறித்திருக்கிறார். ‘‘தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்’’ (ரோம.8:29). இதுதான் நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் முதிர்ச்சி. இதுதான் நமது இலக்கு. **16ஆம் பக்கம் பார்க்க...**

# அணுகுண்டு நாசத்தால் எழுந்த அழிவின் நினைவுச்சின்னம்

ஒரு நினைவுச்சின்னம் (Memorial) கட்டி எழுப்பப்படுகிறதென்றால் அதன் நினைவின் நோக்கம் சந்ததி தோறும் மக்களின் மனதில் அகலாதிருக்க வேண்டும், அழியாதிருக்க வேண்டும் என்பதுதான். ஏனெனில் அதிலிருந்து நிரந்தரமான ஒரு பாடத்தை வாழும் சந்ததியும் வரயிருக்கும் சந்ததிகளும் கற்றுக் கொள்ள வேண்டும். ஜப்பான் தேசத்திலுள்ள ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்களும் அணுகுண்டு வீச்சால் சுமார் இரண்டு இலட்சம் அப்பாவி மக்கள் நொடிப்பொழுதில் செத்து மடிந்தும், அந்த எண்ணிக்கைக்கும் மேற்பட்டோர் கொடிய காயமுற்று சரீர செயலிழந்தும் அதின் கதிர்வீச்சினால் (Radiation) அடுத்த சந்ததியினரின் பாதிப்பும் அணு ஆயுதங்களால் ஏற்படும் கோரத் தன்மை முற்றுப்புள்ளிக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதே அந்த நினைவுச் சின்னத்தின் நோக்கம். 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த அச்சம்பவங்களில் கொடிய காயமடைந்த சிலர் இன்றும் அதன் தழும்புகளோடு பாதிப்பைச் சுமந்து கொண்டிருக்கின்றனர்.

இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம். யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் நாள் காலை எனோலா கே (Enola Gay) என்ற குண்டு வீசும் அமெரிக்க விமானம் ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா என்ற நகரில் “லிட்டில் பாய்” (Little Boy) என்று பெயரிடப்பட்ட அணுகுண்டைப் போட்டது. அதன் விளைவாக நகரின் பெரும்பகுதி அழிந்தது. குழந்தைகள், பெண்கள், ஆண்கள், முதியோர் உட்பட 80,000பேர் அப்போதே செத்து மடிந்தனர். அவர்களில் அநேகர் தொழிற்சாலைகளில் வேலைக்கு வந்தவர்கள். பள்ளிக்கூடத்திற்கு வந்திருந்த மாணவ மாணவிகள் அடங்குவர். சில தினங்களுக்குள் காயங்களின் விளைவாக 20,000க்கும் மேற்பட்டோர் இறந்தார்கள். சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர்கள் கொடிய காயமுற்றனர்.

மீண்டும் மூன்றாவது நாள் ஆகஸ்ட் 9ஆம் நாள் நாகசாகி என்ற மற்றுமொரு நகரில் “ஃபேட்மேன்” (Fat Man) என்ற அணுகுண்டை அமெரிக்க யுத்த விமானம் போட்டது. அதன் விளைவாக அப்போதே சுமார் 40,000 பேர் செத்து மடிந்தனர். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொடிய காயமடைந்தனர். அதைத் தொடர்ந்த கதிர்வீச்சால் அநேகர் மரித்தார்கள். சில தினங்களில் கரும் மழை (Black rain) பெய்தது. குண்டு வீச்சால் வானை எட்டிய புகை மண்டலம், மற்றும் விஷத் தூசி இவைகளால் மழை கருமையாகி “கரும்மழை” பெய்தது. அதன்

விளைவாக மரணமும், நோயும் ஏற்பட்டன.

அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹேரி ட்ரூமன் (Harry Trueman) ஆணையின்படி இந்த அணு குண்டுகள் போடப்பட்டன. யுத்தத்தில் ஜப்பான் சரணடைந்தது. ஜப்பானின் "தொழில் உற்பத்தியை முடக்கி, பொருளாதாரத்தை அழிக்க அதிக அழிவை எங்களால் செய்ய இயலும். எனினும் நாங்கள் கட்டுப்படுத்திக் கொண்டோம்" என்றார் அமெரிக்க ஜனாதிபதி. அமெரிக்கா உலக வல்லரசு என்ற இடத்தை எட்ட எத்தனை அப்பாவி மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இக்கொடிய சம்பவம் நடந்து முடிந்து சரியாக 75 ஆண்டுகள் ஆகின்றன. இதிலிருந்து உலக நாடுகள் என்ன பாடம் கற்றிருக்கின்றன? இதுபோன்ற அழிவுகள் மனுக்குலத்திற்கு இனி ஏற்படாது என்ற உத்தர வாதம் இருக்கிறதா? ஐக்கிய நாடுகளின் சபையால் (UNO) இந்த உத்தரவாதத்தைத் தர முடியுமா? நிச்சயமற்ற ஓர் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சீனாவிலுள்ள ஊகான் என்ற நகரின் இராணுவ பரிசோதனை நிலையத்தில் (Army Laboratory) உயிரிய ஆயுதம் (Bio Bomb) தயாரிக்கும் போது ஏற்பட்ட கசிவின் காரணமாக இன்று உலக நாடுகள் முழுவதிலும் கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறது.

அமெரிக்கா, சீனாவை இதற்காக குற்றம் சாட்டியே பேசுகிறது. உலக நாடுகளில் இலட்சக்கணக்கான மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். வளரும் நாடுகளின் பொருளாதாரம் சீரழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் நேரிடையாக அத்தேசத்தைக் கேட்க நாதியற்ற நிலவரம். "கொடிய தொற்று நோயை உண்டாக்கும் உயிரிய ஆயுதங்களைத் (Bio Bombs) தயாரிக்கும் எண்ணமே வரக் கூடாது. அதைச் செய்யவே தடை செய்யப்பட்டிருக்கிறது. எனினும் தற்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியால் இதுபோன்ற ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதைத் தடுக்க உலக நாடுகள் விழிப்புடனிருக்க வேண்டும்" என்று உயிரிய ஆயுதத் தடைக்கான ஒப்பந்தம் செய்யப்பட்ட 45ஆவது ஆண்டையொட்டி ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார் (தினமலர் 30.3.2020). 9.8.20இல் நாகசாகியில் நடந்த நினைவுநாள் நிகழ்ச்சியில் ஜப்பான் பிரதமர் ஷின்கோ அபே "அணுஆயுத அச்சுறுத்தல் எப்போதுமில்லாத அளவுக்கு அதிகரித்து வருகிறது. உலகநாடுகள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சர்வதேச நாடுகள் அணு ஆயுத தடுப்பிற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்" என்று பேசியுள்ளார். **(தினமலர் 10.8.20)**

ஆனாலும் இன்று நடப்பதென்ன? ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்

2

களில் ஏற்பட்ட பேரழிவை விட பல மடங்கு சக்தி வாய்ந்த அணுஆயுதங் களை அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இஸ்ரவேல், இந்தியா, பாகிஸ்தான் வடகொரியா ஆகிய நாடுகள் தயாரித்து வரு கின்றன. வல்லரசு நாடுகள் அவற்றைத் தயாரித்து குவித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. சிலநாடுகள் யுத்த ஆயுதங்களையும், விமானங்களையும், கப்பல்களையும் தயாரித்து விற்பனைச் செய்கின்றன. மேற்குறிப்பிட்ட நாடுகள் இவற்றைத் தயாரிப்பதற்குக் கோடிக்கணக்காகப் பணத்தைச் செலவழித்து வரு கின்றன. ஆகவே இந்த உலகம் ஒரு பேரழிவை நோக்கித் துரிதமாகச் சென்று கொண்டிருக்கிறது. (தகவல் - THE HINDU 6.8.2020) வேறுவித மாகச் சொன்னால் உலகம் மூன்றா வது உலக யுத்தத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அதன் செயல் பாடுகள் இப்போதே தொடங்கி விட்டன. இப்போதே அமெரிக்கா வுக்கும் சீனாவுக்கும் பனிப்போர் (Cold war) ஆரம்பித்துவிட்டன என்ப தற்கான ஆதாரங்கள் வெளிப்படை யாகிக் கொண்டிருக்கின்றன. மனிதாபி மானமற்றத் தலைவர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அணு ஆயுத தாக்குதல் இல்லாமல் அதிர்ஷ்ட வசமாக (Luckily) 75 ஆண்டு களைத் தாண்டி வந்திருக்கிறோம். இந்த அதிர்ஷ்டம் இனியும் நீடிக்கும் உத்தரவாதம் இல்லை என்ற செய்தியை (The Hindu 6.8.2020) வலியுறுத்திக் காட்டுகிறது.

அதிர்ஷ்டம் (Luck) என்ற சொல் பயன்படுத்தியிருப்பதைத் தொடர்ந்து நான் காவல்துறையில் எனது பணிக் காலத்தை நினைவுகூருகிறேன். தீர்வு செய்ய முடியாத சில வழக்குகள் என்னுடைய விசாரணைக்கு ஒப்பு விக்கப்பட்டு அவற்றை ஆண்ட வருடைய கிருபையால் தீர்வு செய்த வேளையில், “செல்வின் அதிர்ஷ்டக் காரர்” (Selwyn is lucky) என்று உயர் அதிகாரிகள் சொன்ன சந்தர்ப்பம் உண்டு. அப்போதெல்லாம் நான் சொன்ன பதில் “அதிர்ஷ்டம் அல்ல, ஆண்டவருடைய கிருபை” (It is not luck, it is the grace of God) என்பது தான். அதைத்தான் நான் இங்கே நினைவு கூருகிறேன். ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து அவரது இரண்டாம் வருகையின் அடை யாளங்களைச் சொல்லும்போது **“யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படு வீர்கள்...இவைகளெல்லாம் சம்ப விக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு (Nation) விரோதமாய் ஜனமும், (Nation) இராஜ்ஜியத்திற்கு விரோத மாக இராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய் களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவை களெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்”** (மத்.24:6,7,8). “ஆனாலும் முடிவு உடனே வராது” என்றும் “இவைகளெல்லாம் வேத னைக்கு ஆரம்பம்” என்றும் சொல்லி யிருக்கிறார் என்றால் இவைகள் ஒரு

முன்னோடி நிகழ்வுகள் என்பதை நாம் விளங்கிக் கொள்ளுகிறோம். அப்படியானால் இது ஆண்டவர் நமக்குக் கிருபையாகத் தந்திருக்கும் கால அவகாசம். ஆகவேதான் ‘‘இனி காலமில்லை’’ என்ற எச்சரிக்கை வருகிறது. ஆண்டவர் தம்முடைய சம்பத்தைச் (Jewel) சேர்க்கும் நாள் சமீபித்துவிட்டது. இஸ்ரவேல் மக்களைப் பார்த்து, ‘‘நீங்களே எனக்கு சொந்தச் சம்பத்தாயிருப்பீர்கள்’’ என்று (யாத்.19:5)இல் சொன்னது போல நம்மைப் பார்த்து நீங்கள் தான் என் சொந்த சம்பத்து என்று சொல்லும் இடத்திலிருக்கிறோமா? இல்லாவிட்டால் குறுகிய கால அவகாசத்தை தவறவிட்டு விடாமல் சம்பத்தாக மாறுவோம், ஆண்டவர் கிருபை அருளுவாராக. ●

# நீரே என் மறைவிடம்

தாவீது, சவுல் இராஜாவுக்குப் பயந்து காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் சில காலம் மறைந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தான். எந்த நேரத்திலும் தான் கொல்லப்படலாம் என்ற மரண பீதியில் வாழ்ந்தான். எனினும் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ‘‘நீரே எனக்கு மறைவிடமாய் இருக்கிறீர்’’ என்று (சங்.32:7)ன் படி தேவனிடத்தில் முற்றுமாக சார்ந்து கொண்டபோது, தேவன் அவனுடைய வாஞ்சையை அறிந்து தாவீதுக்கு மறைவிடமாய் இருந்தார். ஆகவே சவுலின் பெரும் படையினரின் கைக்குத் தப்புவிக்கப்பட்டான். ஒருமுறை சவுலே அந்த பெரும் படையினருக்குத் தலைமை ஏற்று வந்த வேளையிலும் தாவீதுக்கு எத்தீங்கும் செய்யாமல் தேவன், சவுலை பின்வாங்கிப் போகச் செய்தார் (1 சாமு.24ஆம் அதிகாரம்).

இன்று நம் ஒவ்வொருவருக்கும் தேவனே மறைவிடமாய் இருக்க நம்மை அவரது கரத்தில் முற்றுமாக ஒப்புவிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நம்மையும், பிள்ளைகளையும், குடும்பத்தினரையும் அவருடைய கரத்தின் மறைவுக்கு ஒப்புவிப்போம் (ஏசா.51:16). அப்பொழுது அவர் நம்மை அவருக்குள் மறைத்து காத்துக் கொள்வார். ●

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் ஊழியங்களைத் தாங்கவிரும்புவோர் கவனத்திற்கு, எங்கள் SBI வங்கி எண்ணைப் பயன்படுத்தலாம்.**

**K. SELWYN THANGADURAI, A/C No: 101697 87024**

SBI, Arasaradi Branch, Madurai - IFSC Code: SBIN 0007482.

காணிக்கை அனுப்பிவிட்டு **9842143523**-க்கு தகவல் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். உங்களோடு நாங்கள் தொடர்புகொள்ள உங்களது தொலைபேசி எண்ணை மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்ணுக்கு தயவுசெய்து **SMS** மூலமாக எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். -**தொகுப்பாசிரியர்.**

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

பாகம் 12

## கிறிஸ்தியான் மாயாபுரிச் சந்தையிலிருந்து தப்புதல்

மாயாபுரிச் சந்தையில் நடந்த நீதிமன்ற விசாரணைத் தீர்ப்பின்படி "உண்மையானவன்" (Faithful) இரும்புக் கம்பத்தில் கட்டப்பட்டு உயிரோடு கொல்லப்பட்டான். அதன் பின் சிறையில் அடைக்கப்பட்ட கிறிஸ்தியானைக் குறித்து யாரும் கண்டு கொள்ளவில்லை. கிறிஸ்தியானை மறந்துவிட்டனர். "உண்மையானவன்" அக்கினி இரதம் இறங்கி வந்து அவனை வரவேற்று மகிமையோடு பரலோகப் பட்டணத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைக் கிறிஸ்தியான் தனது தரிசனத்தில் கண்டு மகிழ்ச்சியடைந்தான். சில நாட்களுக்குள்ளாக கிறிஸ்தியான் அதிசயமான வகையில் சிறைச் சாலையிலிருந்து தப்பி வெளியேறினான். தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

கிறிஸ்தியான் போகிற வழியில் "நன்நம்பிக்கை" (Hopeful) என்பவனைச் சந்தித்தான். பயணத்தில் ஒரு துணையாள் கிடைத்தது. கிறிஸ்தியானுக்கு மிகுந்த மகிழ்ச்சிதான். தொடர்ந்து சென்ற பயணத்தின் வழியில் "உலக பக்தன்" (By-ends) என்ற மற்றுமொரு பயணியைச் சந்தித்தார்கள். "உலக பக்தனிடம்" அது அவனுடைய இயல்பான பெயரா, வேறுபெயர் இருக்கிறதா என்று கிறிஸ்தியான் கேட்டதற்கு அவன் சரியாகப் பதில் சொல்லவில்லை. ஆனால் அவன் "நயவசனப்பட்டணத்திலிருந்து வருவதாகக் கூறினான்" (City of fair speech) "நயவசனம் பட்டணம்" இங்கு வசிப்பவர்கள் பேச்சு இதமாக இருக்கும். ஆனால் உள்ளே வஞ்சகம் நிறைந்ததாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருப்பதாகக் கிறிஸ்தியான் சொன்னான். அந்த பதிலுக்கு அவன் ஒன்றும் சொல்லவில்லை.

"உலக பக்தன்" தனக்கு அந்த பட்டணத்தில் மிகச் செல்வந்தர்களான அநேக நண்பர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுள் சிலருடைய பெயரைச் சொன்னான். "கட்சிமாறி" (Lord Turn about), "சமயத்திற்கு ஏற்ப பேசுபவன்" (Lord Time-Server), "இன்சொல்லன்" (Lord Fair Speech), "சாதுவானவன்" (Mr. Smooth man), "இரட்டை முகன்" (Mr. Facing both-ways), "இரட்டை நாக்கன்" (Mr. Two Tongues) ஆகியோர் ஆவர். அவர்கள் யாரையும் துன்புறுத்துவதில்லை. தங்களுடைய சௌகரியமும், வளமை வாழ்வுமே அவர்களுடைய மதம். அவர்கள் நீரோட்டத்தின் ஓட்டத்திலே ஓடிக் கொண்டிருப்பவர்கள்.

கிறிஸ்தியான், உலக பக்தனிடம் நீ எங்களோடு சேர்ந்து பயணம் செய்ய

வேண்டுமானால் ஆண்டவருடைய வார்த்தையை மாத்திரம் பற்றிக் கொண்டு சுக போகமாக அல்ல, காற்றுக்கும் அலைகளுக்கும் எதிர்த்து, பாதையில் சந்திக்கும் பாடுகளையும் சந்தித்து, சகித்து அவற்றை மேற்கொள்ளும் தீர்மானத்தோடு வந்தால் வரலாம் என்றும் அதுதான் சரியான மார்க்கமாக இருக்கும் என்றும் சொன்னான். கிறிஸ்தியான் அப்படிச் சொன்னது உலகப் பக்தனுக்குப் பிடிக்கவில்லை. “ நீ விரும்புகிற நம்பிக்கையை என் மீது திணிக்கக் கூடாது. எனக்கு இருக்கும் நம்பிக்கையில் பயணிக்க எனக்கு உரிமையிருக்கிறது” என்று வாதிட்டான். ஆனாலும் கிறிஸ்தியான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே “உலக பக்தன்” கிறிஸ்தியானோடு தொடர்ந்து நடப்பதில் பின் தங்கி விட்டான். ஆனாலும் அவனுடைய மனப்பான்மையுள்ள மற்றும் மூவரைத் தெரிந்து கொண்டு பயணத்தை மேற்கொண்டான். அவர்களில் ஒருவன் “உலகப் பிரியன்” (By ends), மற்றொருவன் “பணப்பிரியன்” (Money Lover) மற்றுமொருவன் “கஞ்சன்” (Miser). அவர்களெல்லாம் “பொருளாசைப் பள்ளியில்” (School of Covetous) ஒன்றாய்ப் படித்தவர்கள். அவர்களெல்லாம் அராஜகம் அல்லது கொடுமை செய்வதிலும் (Violence) மற்றவர்களைத் துதிபாடி (Flattery) ஏமாற்றுவதிலும், மதம் என்ற பெயரில் பொய்களைச் (Lying) சொல்வதிலும் தேறினவர்கள். கிறிஸ்தியானும் நன்நம்பிக்கைக்கும் பின்னால் கொஞ்ச தொலைவில் அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

பணப்பிரியன், தன்னோடு வந்தவர்களிடத்தில் ஒரு கேள்வியை வைத்தான். “ஓர் ஊழியக்காரன் அல்லது ஒரு வியாபாரி தனக்கு வாய்ப்பு கிடைக்கும்போது தன்னுடைய பக்தியை முன்னிலைப்படுத்தி பாசாங்கு செய்து மற்றவர்களைத் துதிபாடி ஆஸ்தியை சம்பாதிப்பது நல்லதா?” என்று கேட்டான். அதற்கு “உலக பக்தன்” “அந்த ஊழியக்காரன் செய்தது சட்டத்திற்கு விரோதமானதல்ல. ஏனெனில் அவனுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பைக் கொடுத்தது அந்த நபர்தான். ஆகவே அதில் தவறில்லை” என்றான். அந்தப் பதிலால் அவர்களாக நியாயப்படுத்திக் கொண்டு வேகமாகக் கிறிஸ்தியானை நோக்கி அதே கேள்வியைக் கேட்பதற்குத் துரிதமாக நெருங்கிக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்தியானிடம் அதே கேள்வியை கேட்டபோது அவன் கொஞ்சமும் தயக்கமின்றி “தேவபக்தி உள்ளவன் போன்று பாசாங்கு செய்து ஆஸ்திகளைப் பெருக்கிக் கொள்ள நாடுவார்களானால் அது அருவருப்பான காரியமாகும்” என்று பதிலளித்தான். அதற்குப் பரிசேயர்களையும், யூதாசையும் சீமோனையும் முன் உதாரணமாகச் சுட்டிக்காட்டினான். கிறிஸ்தியான், உலகவழியில் சென்று மாய்

மாலமான வாழ்க்கை வாழுகிற அந்த நான்கு பேரையும் மிகவும் கண்டித்து உணர்த்தினான். கடைசியாக நீங்கள் செய்யும் அனைத்து செயல்களுக்கும் அதற்குரிய பிரதி பலனைப் பெறுவீர்கள் என எச்சரித்து விட்டு கிறிஸ்தியானும் நன்நம்பிக்கையும் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

அவர்கள் சமவெளியான ஓர் இடத்தை வந்து சேர்ந்தனர். அந்த இடத்திற்கு “இளைப்பாறுதல்” (Ease) என்று பெயர். அந்த சம வெளிப் பயணம் மிகவும் மகிழ்ச்சி நிறைந்ததாயிருந்தது. சம வெளியைத் தாண்டி வந்ததும் ஒரு மலை இருக்கிறது. அதற்கு “செல்வ மலை” (Lucre) என்று பெயர். அந்த மலையில் வெள்ளிச் சுரங்கம் இருந்தது. இந்தப் பகுதிக்குச் சுற்றுலாப் பயணம் வரும் பயணிகள் இந்த வெள்ளிச்சுரங்கத்தின் இனிமையான காட்சியால் ஈர்க்கப்பட்டு அதைக் கண்டு களிக்கவும் அந்த வெள்ளிச் செல்வங்களைக் காணவும் அருகில் செல்வார்கள். அதை இன்னும் நெருங்கிச் செல்லும் போது அது சருக்கலான தரையாக இருப்பதால் அந்த மலையிலிருந்து பள்ளத்தாக்கின் ஆழத்திற்குள் சுரங்கத்திற்குள் விழுந்து அவர்களின் அழிவைச் சந்திப்பார்கள். சருக்கலான இடத்தில் வெளித்தோற்ற மாயையால் வஞ்சிக்கப்பட்டுப் போனார்கள். தேமா என்பவன் அங்கு நின்று கொண்டு பயணிகளைக் கட்டாயப்படுத்தி அருகில் வர அழைத்து அழிவுக்குள் நடத்திக் கொண்டிருக்கிறான். தேமா கிறிஸ்தியானையும் நன்நம்பிக்கையையும் வருந்தி அழைத்து அருகில் கொண்டு வர முயற்சித்தான். ஆனால் அவர்கள் பூலோகக் கருவூலமாகிய வெள்ளிச் செல்வத்தின் அழகால் ஈர்க்கப்படாமல் தங்களைக் காத்துக் கொண்டார்கள். தேமாவின் அழைப்பைப் பொருட்படுத்தாமல் நேர் வழியில் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

தேமாவின் அழைப்பை ஏற்றுச் சென்ற அந்த நான்கு பேரும் வெள்ளிச் சுரங்கத்தைக் காண ஆசையோடு சென்றனர். செல்வமலையை நோக்கிச் சென்ற அவர்களை மீண்டும் காண முடியவில்லை. கிறிஸ்தியானும் நன்நம்பிக்கையும் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருந்தனர். வழியில் தூணாக நின்று கொண்டிருந்த ஒரு நினைவுச் சின்னத்தைக் கண்டார்கள். அந்தத் தூணில் “லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்” என்று எழுதப்பட்டிருந்தது. உலகச் செல்வச் செழிப்புகளைக் காண்பதைத் தவிர்த்து காக்கப்பட்டு பயணத்தைத் தொடர்வதை எண்ணி மகிழ்ச்சியடைந்தனர். கிறிஸ்தியான், உலகச் செல்வங்களை அடைய அதை பின்தொடருவோரின் அறியாமையையும் அவர்களின் அழிவையும் எண்ணிப் பார்த்தான். வழியில் பளிங்குபோல் மின்னும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த அழகிய

ஒரு நதியைக் கண்டார்கள். அதன் கரை ஓரத்தில் அருமையான பழ மரங்கள் நின்றன. நதியில் தண் ணீர் அருந்தித் தாகம் தீர்த்தனர். பழங்களைச் சாப்பிட்டு மகிழ்ந்தனர். அங்கு சற்று ஓய்வு எடுத்தனர்.

**நாம் கற்றுக்கொள்வது**

"உலகபக்தன்" கிறிஸ்தியான் மற்றும் அவனுடைய நண்பர்கள் இவர்களின் உரையாடலிலிருந்து இந்த நாட்களில் சபைகளில் நடக்கும் காரியங்களில் அநேகம் அதோடு ஒத்துப்போவதைக் காண முடிகிறது. ஜாண் பன்யன் தீர்க்க தரிசனமாக பெரும்பான்மையான சபைகளும் சபையின் ஊழியக் காரர்களும் பொருளாதார மற்றும் நிதித் தொடர்பான ஆசீர்வாதங் களையே நாடித் தேடுகின்றனர் என் பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் கேயாசி, லோத் தின் மனைவி, கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரைப்போல கண்ணி களில் சிக்கி தங்களுக்கு அழிவை வருவித்துக் கொள்வார்கள். பாரம்பரிய மாகச் செய்கிற மதமுறைமைகளைச் செய்வதாலும் பக்திமானாக இருப்பது போல நடந்து கொண்டாலும், பிரமா ணத்தின்படி செய்கிற காரியங்களைச் செய்தாலும் ஆண்டவர் இருதயத்தின் நோக்கத்தைப் பார்க்கிறார். நோக்கம் அவருடைய சித்தத்திற்கு மாறாக இருக்குமானால் அவருடைய கோபாக் கினையையே சந்திப்பார்கள். பண ஆசைக்குப் பின் செல்லாமல் ஆண்ட வருடைய வழியிலேயே நடப்போம்.

- சகோதரி. லாரா டெலனோ,
lauradelano@yahoo.com ●

"**தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**" (பிலிப்.4:6)

## கிறிஸ்தவ ஆலோசனை மையம்

இன்றைய உலகில் உள்ள போராட்டமான சூழ்நிலைகளினாலும், பிசாசின் தந்திரங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், தனிப்பட்ட நபர்கள் ஆகியோருக்கு இலவசமாக ஆலோசனைகள், ஜெப உதவி வழங்கும் பொருட்டு திங்கட்கிழமை காலை 10 மணிக்கு "கிறிஸ்தவ ஆலோ சனை மையம்" இயங்கும். பிரச்சனைகள் இரகசியமாக வைக்கப்படும்.

**தொடர்புகொள்ள: 98421 43523 / அலுவலக முகவரி: 3ஆம் பக்கம் உள்ளபடி**



## அருட்பணி இயக்கத்தின் தந்தை

**"கடவுளுக்கென்று பெரிய காரியங்களைச் செய்,**
**கடவுளிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்"**

(Attempt Great things for God / Expect great things from God)- **வில்லியம் கேரி**

செராம்பூர் இரயில் நிலையத்தில் வில்லியம் கேரியின் நினைவாக இந்திய அரசாங்கத்தால் கேரியின் நினைவாக வைக்கப்பட்டுள்ள கல்வெட்டில் வில்லியம் கேரி சொன்ன மேற்குறிப்பிட்ட வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. ●

## இந்த நாட்டைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்

"இந்த நாட்டில் ஊழல் பெருகி, அதன் உச்சத்தை அடைந்திருக்கிறது. இதற்கு முன்பிருந்த அரசு ஊழலை வித்திட்டு வளர்த்தது. அது இன்று ஆழமாக வேரூன்றி மரமாக நிற்கிறது. இதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் பிரதமர் பதவியிலிருந்து விலகுகிறேன். இந்த நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்". இப்படிச் சொல்லி பதவி விலகியவர் லெபனான் நாட்டின் பிரதமர் ஹாசன் தியாப். ஓர் ஆண்டுக்குள் இவர் மூன்றாவது பிரதமர். அப்படியானால் அந்த நாட்டின் நிர்வாகத்தின் நிலை எப்படியிருக்கும் என்பதை நம்மால் யூகிக்க முடிகிறது. இந்த ஊழல் மத்தியில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் அதையும் கட்டுக்குள் கொண்டு வரமுடியாமல் பெரும் பொருளாதாரச் சரிவை உண்டாக்கிற்று. இப்பொழுது அவற்றை எல்லாம் தாண்டி லெபனானிலுள்ள பெய்ரூட் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த 27 இலட்சம் கிலோ எடையுள்ள அம்மோனியம் நைட்ரேட் என்ற இரசாயனப்பொருள் தீவிபத்தில் வெடித்துச் சிதறிய அதிர்ச்சியூட்டும் பேரிடரைச் சந்தித்திருக்கிறது. 160 பேர் உயிரிழந் தார்கள். 6000க்கும் அதிகமானோர் காயமுற்றார்கள். நொடிப்பொழுதில் 3000க்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளை இழந்தார்கள். இந்த இரசாயனப் பொருள் 7 ஆண்டுகளுக்கு மேலாகப் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப் பட்டுள்ளது. அரசின் அலட்சியப் போக்கே காரணம் என்ற சூழ்நிலையில் மக்கள் கொதித்தெழுந்து போராட்டத்தில் இறங்கினார்கள். அதன் விளைவே பிரதமரின் பதவி விலகல். **(தகவல் - தினமலர் 12.8.20)**

**சபை கண்ணோட்டத்தில் லெபனான்**

சபையை ஆண்டவர் மறந்துவிட்டாரோ? சாபத்திற்கு ஒப்புக்கொடுத்து விட்டாரோ? என்ற எண்ணங்கள் தலைதூக்கும் நிலையை சபை எட்டியிருக் கிறது என்று சொல்லலாம். லெபனான் மிகப்பெரிய பொருளாதாரப் பிரச் சனையில் (Economic Crisis) சிக்கித் தவிக்கிறது. அந்நாட்டின் நாணயத்தின் (Currency) மதிப்பு 80 சதவீதம் சரிந்திருக்கிறது. மக்கள் தங்கள் பணத்தை வங்கியிலிருந்து எடுக்க முடியாத கட்டுப்பாடுகள். நாட்டுப்புறப் பகுதிகளில் கொடிய பஞ்சம், ஊழல் ஆட்சி, எந்த வேளையிலும் புரட்சி வெடிக்கும் சூழ்நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மத்தியிலும் இயேசுவின் இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்து வாங்கப்பட்ட சபை விசுவாசிகள் சுவிசேஷத்தின் வல்லமையையும் அதன் மீதுள்ள நம்பிக்கையையும் இழந்துவிடவில்லை. அழிவின் இருளில் வாழும் மக்கள் மத்தியில் பிரகாசிக்கும் வெளிச்சமாக இருக்கிறார்கள். பெய்ரூட்டில் இந்த விபத்து நடந்த இடத்திற்கு அருகாமையில் சுமார் அரை கிலோமீட்டர் தொலைவில்தான் சிட்டி பைபிள் சர்ச் (City Bible Church) உள்ளது. மார்வன் அபௌல் சீலாஃப் (Marwan Aboul - zelof) என்பவர்தான் அந்த சபையின் நிறுவனர். அவர்தான் அதன் போதகர். இப்பொழுது முற்றுமாக அழிக்கப்பட்டு ஒரு யுத்தக்களத்தைப் போல் காட்சியளிக்கிறது.

கெம்பீரமாக நின்ற ஆலயத்தைப் பார்க்கும்போது இதயமே கனக்கிறது. இதற்கு மத்தியில் ஓர் ஆறுதல் என்னவெனில் இச்சம்பவம் ஒரு ஞாயிற்றுக் கிழமையில் நடந்திருந்தால் 100க்கும் மேற்பட்ட விசுவாசிகள் அழிந்து போயிருப் பார்கள். மேலும் சபை விசுவாசிகள் சிலர் காயமுற்றாலும் பெரும் சேதமில் லாமல் காக்கப்பட்டது ஆண்டவர் காட்டிய மகாபெரிய அன்பும், இரக்கமுமாகும்.

சம்பவத்திற்கு முந்தின ஞாயிற்றுகிழமை காலை ஆராதனையில் போதகர் மார்வன் தாவீது 13ஆம் சங்கீதத்தில் எழுப்பிய கேள்விகளின் அடிப்படையில் பிரசங்கம் செய்துள்ளார். ‘‘கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர், எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?’’ (சங்.13:1,2) இதைப் பிரசங்கித்து விசு வாசிகளை அதன் அடிப்படையில் ஜெபத்தில் நடத்தியுள்ளார். கடைசியாக ‘‘நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன். உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்’’ என்ற (வ.5)ன் படி கிருபையையும் கிருபையால் கிடைத்த இரட்சிப்பின் சந்தோஷத்தையும் முதன் மைப்படுத்தியுள்ளார். சம்பவத்தைக் கேள்விப்பட்ட பொழுது இந்த வசனங் களையே போதகர் மார்வன் நினைவு கூர்ந்துள்ளார். சம்பவ நாளில் போதகர் மார்வன் அவர்களது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளோடு வெளியூர் சென்றிருந்தார். அவரது வீடு சம்பவ இடத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ளது. தகவல் அறிந்ததும் அவர் உடனே பெய்ரூட் திரும்பி விட்டார். எனினும் சபை மக்கள் போதகரின் வருகைக்குக் காத்திராமல் தேவையிலிருக்கும் சக விசுவாசிகளுக்கு உதவி செய்ததும் அவர்களை சென்று விசாரித்ததும் மிகவும் பாராட்டுதற்குரியதாக இருந்தது. பலவீனங்கள் மத்தியில் பெலவானைப் போல செயல்பட்டதின் காரணமாக ஆண்டவருடைய நாமம் மற்றவர்கள் மத்தியில் மகிமைப்பட்டது.

இந்த ஆலயம் விரைவில் கட்டப்பட்டு எழும்பவேண்டும். இந்த நாடு பொருளாதாரச் சரிவிலிருந்தும், ஊழலிலிருந்தும் விடுதலை பெற்றுச் சீர்ப் படவும் அதற்கு இயேசுவே வழி என்பதை மக்கள் விளங்கிக் கொள்ளவும், சபை விசுவாசிகள் ஜெபிப்பதிலும் ஒருவரையொருவர் தாங்குவதிலும் முன்மாதிரியாக நடக்கவும் அந்தச் சபையார் ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்திருக் கிறார்கள். விரைவில் ஆலயம் எழும்ப அநேக உதவுங்கரங்களை ஆண்டவர் எழுப்பியிருக்கிறார். இதைக் குறித்து அந்தச் சபையின் போதகர் அறிக்கை கொடுத்திருக்கிறார். இன்னும் அநேக உதவுங்கரங்களை எதிர்பார்க்கிறார்.

‘‘ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிர மாணத்தை நிறைவேற்றுங்கள்’’ என்ற (கலா.6:2) வேத வசனத்திற்கு ஏற்ப செயல்படுவோம். பிறர் நலம் நாடுவோம். ●

# காரணமின்றிப் பகைக்கப்படுகிறீர்களோ?

**வீணாய் எனக்குச் சத்துருக்களானவர்கள் என்னிமித்தம் சந்தோஷி யாமலும், முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் கண் சிமிட்டாமலும் இருப்பார்களாக.... (சங்.35:19-21).**

தாவீதின் சத்துருக்கள், எந்த விதமான காரணமும் இல்லாமல் தாவீதுக்கு விரோதமாகச் செயல்படுகின்றனர், தாவீதுக்கு நேர்ந்த தீங்குகளைக் கண்டு சந்தோஷப்படுகின்றனர். தாவீதை நியாயமில்லாமல் பகைக்கின்றனர். தாவீது அவர்களுக்கு எத்தனையோ நன்மை செய்திருக்க அவரை நேசிப்பதற்குப் பதிலாகப் பகைத்தார்கள். அவர்கள் நன்றியற்றவர்களானர்கள். எனவே தாவீதிற்கு நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமை செய்கின்றனர். தாவீது தன்னுடைய சத்துருக்களைப் பற்றிய காரியங்களைக் கர்த்தரிடத்தில் ஒப்பு விக்கிறார். இக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கும் தாவீதுக்கு நேர்ந்தது போலவே நேரிடுகிறது, என்றாலும் நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரையின் மூலம் தியானிக்கலாம்.

### முகாந்தரமில்லை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்த வசனங்கள் தன்னைப் பற்றித் தாவீது தனது சங்கீதத்தில் முன்னுரைத்திருப்பதாகச் சொல்கிறார். ‘‘முகாந்தர மில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று’’ என்று (யோவா.15:25)இல் குறிப்பிடுகிறார்.

இவ்வுலக ஜனங்கள் இயேசுகிறிஸ்துவையும், அவரைப் பின்பற்றுபவர் களையும் பகைப்பதற்கு நியாயமான காரணம் எதுவுமே இல்லை. இயேசுவைப் பகைப்பவர்கள் அவரைப் பகைப்பதற்கு யாராலும் எந்தக் காரணத்தையும் கண்டுபிடிக்கவே முடியாது. இயேசுகிறிஸ்து உலகத்தில் எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்யவே வந்தார். அவர் அவர்களை நேசித்தார். ஆனாலும் அவர்களுடைய ‘‘கிரியைகள் பொல்லாதவைகளா யிருக்கிறது’’ என்ற உண்மையைக் கூறினார் (யோவா.3:19,20; 7:7). அவர் களை அழிக்க வேண்டும் என்பதற்காக அல்ல, நல்லவர்களாக்க வேண்டும் எனபதற்காகவே அவர்கள் குற்றத்தை உணர்த்தினார். அவர்கள் இயேசுவைப் பகைப்பதற்கு இது நியாயமான காரணமாகாது. இதனால்தான் இயேசுகிறிஸ்து முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று கூறினார்.

### தேவனுடைய சித்தம்

இயேசு கிறிஸ்து அவர்கள் மீது கோபப்படவில்லை. ஜனங்கள் தன்னைப் பகைப்பதை வேதவாக்கியங்களின் நிறைவேறுதல் என்று சொல்லி

ஏற்றுக்கொள்கிறார். நமது வாழ்க்கையிலும் தேவனுடைய சித்தத்தின் படியாகவே ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது. நம்மைப் பற்றிய தேவனுடைய சித்தம் மாறுவதில்லை. இந்த உலக ஜனங்கள் நம்மைப் பகைப்பதும் குறையப்போவதில்லை. இயேசுகிறிஸ்து நம்மீது வைத்துள்ள அன்பும் மாறுவதில்லை. ஏனெனில் எல்லாமே வேதவாக்கியத்தின் படியே நடைபெறுகிறது. மனிதனுக்கு இருக்க வேண்டிய பொதுவான நல்லகுணம் ஒருவரையொருவர் நலம் விசாரிப்பது, உபசரிப்பது, உதவி செய்வது போன்ற வையே. ஆனால் பகை உணர்வோடு பார்க்கின்றனர், பேசுகின்றனர், கிரியை செய்கின்றனர். மேலும் தேசத்தில் அமைதியாயிருக்கிறவர்களுக்கும் விரோத மான வஞ்சகமான காரியங்களைச் செய்கின்றனர். பகை வரும்போது அங்கே சமாதானம் இருக்காது. தேசத்தில் அமைதி அல்லது சமாதானத்தை விரும்பு பவர்கள் இயேசு கிறிஸ்துவின் சிநேகிதர்களாக இருக்கின்றனர். ஆனால் தங்களுடைய சதி ஆலோசனைகள் நிறைவேறாமல் போவதினால் வெட்கப் பட்டுப் போவார்கள். கர்த்தர் நம்மைத் தப்புவிப்பதால் சத்துருக்களுக்கு மிகுந்த ஏமாற்றமும், அவமானமும் உண்டாகும். நாமும் நம்முடைய வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும்போது நம் ஜீவியத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தஆவியின் நிறைவில் புதுப்பிக்கப்பட வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் தினமும் வளர்ச்சியடைய வேண்டும்.

**உலகமே பகைக்கிறது**

உலகத்தின் ‘‘கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது’’என்று (யோவா.7:7)இல் இயேசு கூறினார். இவ்வுலகத்தில் நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி இவ்வுலகத்தின் கிரியைகள் பொல்லாதவைகள் என்று ஒதுக்கி நன்மை செய்ய ஆரம்பித்தால், உலகம் நம்மையும் பகைக்கத் துவங்கிவிடு வதைக் காணலாம். ‘‘பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்’’ (யோவா.3:20). நாம் ஒளியில் நடக்க ஆரம்பித்தவுடன் ஒளியினிடத்தில் வரப் பயப்படும் அனைவரும் நம்மைப் பகைக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

‘‘நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது’’ (யோவா.17:14). உலகத்தோடு ஒத்த வேஷம் தரிப்பவர்களையே உலகம் நேசிக்கிறது. பாவத்திலிருந்தும், அக்கிர மத்திலிருந்தும், வேறுபிரிந்து, தூய்மையான வாழ்க்கையைத் துவங்கும்படி இயேசுவை நாம் பின்பற்றும் போது, நாமும் உலகத்தாரல்ல என்கிற நிலவரத்தில் காணப்படுகின்றோம். உலகத்தாரல்ல என்று நம்மை அவர்கள் காணும்போது பகைக்கத் துவங்கிவிடுகின்றனர்.

**சொந்த ஜனங்கள் பகைத்தனர்**

இயேசுகிறிஸ்துவை யூதர்கள் பகைத்து, துன்புறுத்தி, சிலுவையில் அறைந்து கொன்றார்கள். பகை வலுவடையும்போது அது கொலையில் முடி வடைகின்றது. ''தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலை பாதகனாய் இருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது'' (1 யோவா.3:15). பகைக்கிறவன் தேவனுடைய பார்வையில் மனுஷ கொலைபாதகனாகக் காணப்படுகின்றான். அவனுக்குள் நித்தியஜீவன் இல்லை. அவன் நரகத்துக்கு ஏதுவாயிருக்கிறான் (மத்.5:22).

யோசேப்பையும் கூட அவரது சொந்த சகோதரர்கள் பகைத்தனர். அவர் களைத் தேடி வந்த யோசேப்பைக் கொலை செய்ய முடிவு செய்தனர். யோசேப்பு தன் தகப்பனால் அதிகம் அன்புகூரப்பட்டான். மேலும் தான் கண்ட சொப் பனங்களைத் தெரிவித்தார். இதினிமித்தமாக அவரைப் பகைத்தனர்.

இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களும், அவரது வல்லமையும் ஜனங் களை அவரிடமாகக் கவர்ந்து இழுத்தன. இதனால் தங்களை உயர்ந்தவர் களாகக் காண்பித்துக் கொண்டிருந்த பிரதான ஆசாரியரும், பரிசேயரும், வேதபாரகர்களும் அவர்மீது பொறாமை கொண்டனர். நம்மையும் கூட நாம் தேவனால் அதிகமாய் நேசிக்கப்படுவதைக் கண்டும், நமக்குக் கிடைக்கின்ற வெளிப்படுத்தல்கள், தரிசனங்கள் நிமித்தமாகவும் நம்மீது பொறாமை கொண்டு மற்றவர்கள் நம்மைப் பகைக்கக்கூடும். உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள். ''உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்'' (1 யோவா.3:13, யோவா.15:18).

**பட்சமாய் நடந்துகொள்ளுதல்**

இயேசுகிறிஸ்து தனக்குத் தீங்குசெய்தவர்களுக்காக ''பிதாவே இவர் களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக் கிறார்களே'' என ஜெபித்து, தான் அவர்களை நேசித்ததை வெளிப்படுத் தினார். யோசேப்பும் கூட தனது சகோதரர்கள் தன்னைப் பகைத்து, தனக்குப் பல தீங்குகள் செய்திருந்த போதும் அவர்களைப் பழிவாங்க வில்லை. ''பயப்படாதிருங்கள்; நான் உங்களையும், உங்கள் குழந்தை களையும் பராமரிப்பேன்'' என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர் களோடே பட்சமாய்ப் பேசினான் (ஆதி.50:21).

சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள் என்று (ரோமர் 12:10)இல் பரிசுத்த பவுல் கூறுகிறார். தேவன் எல்லோரையும் நேசிக் கிறார். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் சூரியனை உதிக்கப் பண்ணி,

நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக் காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் போலவும், யோசேப்பைப் போலவும் நம்மைப் பகைக்கிறவர்களிடத்திலும் அன்புகூறவும், பட்சமாய் நடந்து கொள்ளவும் கற்றுக்கொள்வோமாக.

**பகைக்கிறவர்கள் வெட்கப்படுவார்கள்**

நம்மைப் பகைக்கிறவர்களிடத்தில் பட்சமாய் நடந்து கொள்ளும் போது, நம்மை உயர்த்தி, நம்மைப் பகைக்கிறவர்களுக்கு வெட்கமடையத்தக்க சூழ்நிலைகளைக் கர்த்தர் உருவாக்கிவிடுவார். "சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்" என்று (சங்.129:5)இல் எழுதப்பட்டுள்ளபடி நிறைவேறும். "கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள். என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்கு சந்தோஷமுண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" (ஏசா.66:5). பகைக்கப்பட்டவர்களையோ சந்தோஷப்படுத்தும்படி அவர்களுக்காக அவர் வெளிப்படுவார் (வெளி.19:7,8). ●

## இங்கே ஓர் ஆண்டவர் இருக்கிறார்!

"இப்போதாவது இயேசுகிறிஸ்துவை மறுதலித்து உன்னுடைய ஜீவனைக் காத்துக் கொள்ளுகிறாயா?" அர்மேனிய இளம் வாலிபப் பெண்ணின் கண் முன் பாக தன் தகப்பனையும் தாயையும் கொடிய சித்திரவதைக்குள்ளாக்கிக் கொன்ற பின், துருக்கிய மதத்தீவிரவாதிகள் கேட்ட கேள்விதான் அது. "நான் என் இயேசுவை மறுதலிக்கப் போவதில்லை" என்று துணிவாகப் பதில் உரைத்தாள். "பசியால் வாடிக்கிடக்கும் கொடிய நாய்கள் மத்தியில் போட்டப்பட்டு நீ நாய்களுக்கு இரையாகப் போகிறாய்" என்று மிரட்டினார்கள். அவள் பதில் ஏதும் சொல்ல வில்லை. துணிவின் உறுதியை அவள் முகத்தில் காண முடிந்தது. நாய்க் கூட்டத்திற்குள் தூக்கி எறியப்பட்டாள். அந்தக் காட்சியைக் காண விரும்பாத வர்களாக அவர்கள் சென்றுவிட்டனர். மறுநாள் அதிகாலையில் அத்தீவிரவாதி களில் ஒருவன் அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று காணவந்தான். அவள் இருகரம் கூப்பி முழங்காலில் நின்று ஜெபித்துக் கொண்டிருந்தாள். அந்த நாய் களில் மிகக்கொடூரமான சில நாய்கள் (Most ferocious dogs), அவளை மற்ற நாய்கள் அண்டவிடாமல் சேதப்படுத்திவிடாமல் தடைசெய்து காத்துக் கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றான். "இங்கே ஓர் ஆண்டவர் இருக்கிறார்!. இங்கே ஓர் ஆண்டவர் இருக்கிறார்!!" (There is a God here) என்று தன்னையும் அறியாமல் சத்த மிட்டுக் கொண்டு தீவிரவாதிகள் தங்கியிருந்த இடத்தை நோக்கி ஓடினான்.

- **நன்றி**: "The Speaker's Quote Book"- Ray B. zuck ●

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1 ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 06366826622

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805